ஆசிரியர்கள் தினம், ஓணம், மீலாது நபி: குடியரசுத் தலைவர் வாழ்த்து

புது தில்லி, செப். 5: நாட்டில் ஆசிரியர்கள் தினம், ஓணம் திருநாள், மீலாது நபி பண்டிகை வெள்ளிக்கிழமை (செப்.5) கொண்டாடப்படுவதையொட்டி, குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு எக்ஸ் பதிவு வாயிலாக மக்களுக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஆசிரியர் தினம்: ஒட்டுமொத்த தேசத்துக்கும் உத்வேகமாக விளங்கும் சிறந்த கல்வியாளர் மற்றும் முன்னாள் குடியரசுத் தலைவர் சர்வபள்ளி ராதாகிருஷ்ணனின் பிறந்த நாளான ஆசிரியர் தினத்தில், அவருக்கு மரியாதை செலுத்துகிறேன். ஆசிரியர்கள் நமது சமூகத்துக்கு வழிகாட்டும் ஒளியாகவும், நாட்டின் எதிர்காலத்தை வடிவமைக்கும் சிற்பிகளாகவும் திகழ்கின்றனர். வளர்ச்சியடைந்த இந்தியா என்ற இலக்கை நோக்கி நாடு முன்னேறுகையில், பொறுப்பும், அறிவாற்றலும் கொண்ட சமூகத்தை உருவாக்குவதில் ஆசிரியர்களின் பங்கு முக்கியமானது.

ஓணம் பண்டிகை: ஓணம் பண்டிகையையொட்டி, நாட்டு மக்களுக்கு குறிப்பாக இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் வசிக்கும் கேரள சகோதர, சகோதரிகளுக்கு வாழ்த்துகள். கலாசார, மத நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்டு ஒற்றுமை, நல்லிணக்கத்தின் முக்கியத்துவத்தையும் இந்தப் பண்டிகை நினைவூட்டுகிறது. கலாசார பன்முகத்தன்மைக்கு மதிப்பளித்து, தேச ஒற்றுமைக்கு வலுசேர்க்க உறுதியேற்போம்.

மீலாது நபி: மனிதகுலத்துக்கு ஒற்றுமை-சேவைக்கான செய்தியை நபிகள் நாயகம் வழங்கினார்.

இப்பண்டிகை, அவரது போதனைகளை உட்கிரகித்துக் கொள்ளவும், சமூகத்தில் அமைதி மற்றும் நல்லிணக்கத்தை வளர்க்கவும் நம்மைத் தூண்டுகிறது. நபிகள் நாயகத்தின் போதனைகளில் இருந்து உத்வேகம் பெற்று, அன்பு மற்றும் சகோதரத்துவ உணர்வுடன் பணியாற்றுவோம்.

மீலாது நபி, ஓணம்: முதல்வர், தலைவர்கள் வாழ்த்து

சென்னை, செப். 4: மீலாது நபியையொட்டி முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வியாழக்கிழமை வெளியிட்ட செய்தி:

உண்மை, இரக்கம், ஈகை, அன்பு, கல்வியறிவு, புறம்பேசாமை, பெண்களை மரியாதையுடன் நடத்துதல் என உலகத்துக்கு என்றென்றும் தேவையான நற்கருத்துகளைப் போதித்த உயர்ந்த உள்ளமாகத் திகழ்ந்தவர் நபிகள் நாயகம்.

அவரது போதனைகளைப் பின்பற்றி வாழ்ந்திடும் இஸ்லாமியர்களின் உரிமைகளுக்கும், நலனுக்கும் என்று உழைத்திடும் அரசாக திமுக அரசு திகழ்கிறது. மேலும், ஒவ்வொரு முறை ஆட்சியமைக்கும்போதும் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

சிறுபான்மைச் சமூகத்தினரின் சமூக, பொருளாதார நிலையை உயர்த்துவதில் திராவிட மாடல் அரசு கண்ணும் கருத்துமாகச் செயலாற்றி வருகிறது. இஸ்லாமியர்களுக்கும் இலங்கைத் தமிழருக்கும் எதிரான குடியுரிமைத் திருத்தச் சட்டத்தை எதிர்த்து ஆட்சிக்கு வந்ததுமே சட்டப்பேரவையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ்நாட்டில் அந்தச் சட்டம் நடைமுறைப்படுத்தப்படாது என்று துணிச்சலோடு அறிவித்ததும் நமது அரசு தான். இஸ்லாமியர்களுடன் ஒருவராகவே இருந்து செயல்படும் எனது அரசு சார்பில் மீலாது நபி வாழ்த்துகள் என்று தெரிவித்துள்ளார்.

ஓணம் வாழ்த்து: அறுவடைத் திருநாளாம் ஓணத்தை எழுச்சியோடும், ஏற்றத்தோடும் கொண்டாடும் மலையாள மொழி பேசும் சகோதர சகோதரிகளுக்கு வாழ்த்துகள். சமத்துவத்தையும் சகோதர உணர்வையும் வெளிப்படுத்தும் ஓணம் குறித்து, சங்கத் தமிழ் இலக்கியத்தில் பதிவாகியுள்ளது. திராவிட இனத்தின் திருவிழாவாகத் திருவோணம் விளங்குகிறது.

திராவிட உணர்வெழுச்சியுடன் தமிழ்நாட்டுக்கு உறுதுணையாக நின்று, தென்னகத்தின் தனிச்சிறப்பைப் பறைசாற்றும் மலையாள சகோதர, சகோதரிகளுக்கு எனது ஓணம் தின வாழ்த்துகள் என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

எடப்பாடி பழனிசாமி (அதிமுக): எளியோர்களிடம் கருணை காட்டுங்கள்; சிந்தனையிலும், நடத்தையிலும் தூய்மை உடையவராக இருங்கள்; பசித்தவர்களுக்கு உணவு அளியுங்கள் என்பது, இறைத் தூதர் நபிகள் நாயகம் உலகுக்கு எடுத்துரைத்த போதனைகளாகும்.

நபிகள் நாயகம், போதித்த சாந்தியும், சமாதானமும், சகோதரத்துவமும் இன்றைய உலகின் இன்றியமையாத தேவைகள். அமைதி தழைக்கவும், சமாதானம் ஓங்கவும், சகோதரத்துவம் வளரவும் உழைப்போம்.

திருவோணத்திருநாளான இந்த நன்னாளில், இல்லந்தோறும் அன்பும், அமைதியும் நிலவட்டும்; மகிழ்ச்சியும், செல்வமும் பெருகட்டும் என்று மலையாள மொழி பேசும் மக்களுக்கு வாழ்த்துகள்.

கு.செல்வப்பெருந்தகை (காங்கிரஸ்): நபிகள் நாயகம் போதனைகளின்படி, அனைத்து மக்களிடையேயும் அன்பையும், ஏழை மக்களிடம் பரிவையும் நோக்கமாகக் கொண்டு செயல்படுவதன் மூலம் வகுப்புவாத சக்திகளின் பிளவு அரசியலை முறியடிக்க முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது. மேலும், மலையாள மக்கள் அனைவருக்கும் ஓணம் பண்டிகை வாழ்த்துகள்.

வைகோ (மதிமுக): நபிகள் நாயகத்தின் பிறந்த நாளாகிய இந்தப் பொன்னாளில், தமிழகத்தில் சமய நல்லிணக்கத்தையும், சகோதரத்துவத்தையும் பாதுகாக்க உறுதி எடுப்போம்.

இதேபோல், பாமக தலைவர் அன்புமணி, தமாகா தலைவர் ஜி.கே.வாசன் ஆகியோரும் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

OMKARA ASSETS RECONSTRUCTION PVT. LTD.

ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிட்.

கூட்டுரிமை நிறுவன அடையாள எண்: U67100TZ2014PTC020363

பதிவு அலுவலகம்: 9, M.P நகர், 1,ஆவது தெரு, கொங்கு நகர் விரிவு, திருப்பூர் – 641607.

கூட்டுரிமை நிறுவன அலுவலகம்: கோஹிநூர் சதுக்கம், 47,ஆவது தளம், N.C கெல்கர் மார்க், R.G கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை–400028. தொ.பே.: 022–6923 1111.

கடனீட்டுச் சொத்துக்களை ஒரக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6)– அதனுடன் 9(1) ஆகியவற்றின் கீழான அசையும் சொத்துக்கள் மற்றும் அசையாச் சொத்துக்களின் உ–ஏல விற்பனை அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், கீழ்க்காணும் உரிய கடன்தாரர்(கள்) மற்றும் கூட்டுக் கடன்தாரர்(கள்) / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள் ஆகியோரிடமிருந்து ஈடு பெற்றுக் கடனளித்த வகையில் ஓம்காரா அசெட்ஸ் ரணகிண்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிட்., (OARPL) நிறுவனத்துக்கு வர வேண்டியுள்ளதும் 31.07.2025 நாள்படியானதுமான **ரூ.13,94,34,244/– (ரூபாய் பதின்மூன்று கோடியே தொண்ணூற்று நான்கு இலட்சத்து முப்பத்து நான்காயிரத்து இருநூற்று நாற்பத்து நான்கு மட்டும்)** தொகையைத் திருப்பிப் பெறும் பொருட்டு, ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திடம் அடமானம் / அடகு வைக்கப்படுள்ளதும் சிட்டி யூனியன் வங்கியின் (CUB) அதிகாரப்பூர்வ அலுவலரால் நேரடி சுவாதீனம் செய்யப்பட்டுள்ளதுமான கீழே விவரிக்கப்பட்டுள்ள அசையாச் சொத்தானது "உள்ளது உள்ள இடத்தில்", "உள்ளது உள்ளபடி", "உள்ள இடத்தில் உள்ள அனைத்தும்", "திரும்பப் பெறப்பட மாட்டாது" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்பட உள்ளது. மேற்படி சொத்துக்கான குறைந்தபட்ச விலை மற்றும் டேவணித்தொகை (EMD) ஆகியவை கீழே உரிய பத்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. இம.ஆ நிறுவனமானது (அரல் கடனாளர்) கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்களின் கடனை இந்தியா ரிசர்ஜென்ஸ் ARC டிரஸ்ட் VI நிறுவனத்தின் டிரஸ்டியாகச் செயல்படும் IRAPL நிறுவனத்திடம் 03.05.2023 அன்று ஒப்படைத்து விட்டது. இதன் பின்னர், 16.08.2024 நாளிட்ட கடனீட்டுச் சொத்துப் பற்றுச்சீட்டுக் (SR) கொள்முதல் ஒப்பந்தத்தின்படி OARPL நிறுவனமானது இந்தியா ரிசர்ஜென்ஸ் ARC டிரஸ்ட் VI நிறுவனத்தின் டிரஸ்டியாக IRAPL நிறுவனத்தின் இடத்தில் வந்தமர்ந்துள்ளதோடு தற்பொழுது ஒப்படைப்பாளராகப் பொறுப்பேற்றும் குறிப்பிட்ட நிலுவைத்தொகைகளைத் திரும்பப் பெறவும் கடனீட்டுச் சொத்துக்கள் மீது அமலாக்க நடவடிக்கை மேற்கொள்ளவும் அதிகாரம் பெற்றுள்ளது.

கடன்தாரர் / கூட்டுக் கடன்தாரர் / ஜாமீன்தாரர்கள் / அடமானதாரர்கள்	SARFAESI சட்டம் பிரிவு 13(2) & 13(4)–இன்கீழான கோரிக்கை அறிவிப்பு நாள்	சொத்து விவரம்	குறைந்தபட்ச விலை (ரூபாயில்)	டேவணித் தொகை (EMD) (ரூபாயில்)	ஆய்வு நாள் / நேரம்
கடன்தாரர்: M/s. வேலவன் பேப்பர் போர்ட்ஸ் லிமிடெட், கூட்டுக் கடன்தாரர் / அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்கள் : திரு. M.K. பாஸ்கரன் M/s. ஸ்ரீ குமரன் போர்ட்ஸ், திருமதி B. பழனி அம்மாள், திரு. B. வசந்த், திருமதி சுபா	13(2) அறிவிப்பு வழங்கப்பட்ட நாள்: 12.06.2018 13(4) நேரடி சுவாதீன நாள்: 04.10.2019	நாமக்கல் பதிவு மாவட்டம், திருச்செங்கோடு சார்பதிவு மாவட்டம், தோக்கவாடி, கவுண்டம்பாளையம் கிராமத்தைச் சேர்ந்த SF எண் 7, புஞ்சை நெறக்.4.72.0, புஞ்சை ஏக்கர் 11.66, தரம் RS 14.58, பட்டா எண் 230. இது பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ளது: வடக்கில், ராசப்பன், ராமகிருஷ்ணமூர்த்தி, ராமசாமி ஆகியோரின் நிலங்களுக்குத் தெற்கில், SF எண் 12–க்கு மேற்கில், SF எண் 8, காடச்சாலல்லூர் கிராம எல்லைகளுக்கு வடக்கில், காடச்சாலல்லூர் கிராம எல்லைகளுக்குக் கிழக்கில், இவற்றுக்கிடையே உள்ள மொத்தப் பரப்பளவு புஞ்சை ஏக்கர் 4.86 சென்ட் கொண்ட நிலங்கள் மற்றும் அனைத்து வழிப்பாதை மற்றும் பழக்க உரிமைகள் உட்பட..	ரூ. 1,99,80,000/– (ரூபாய் ஒரு கோடியே தொண்ணூற்று ஒன்பது இலட்சத்து எண்பதாயிரம் மட்டும்)	ரூ. 19,98,000/– (ரூபாய் பத்தொன்பது இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரம் மட்டும்)	11.09.2025 அன்று முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 01.00 மணி வரை

குறிப்பு:– தெரிந்த வரையில் வில்லங்கம் ஏதும் இல்லை

ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்:

விற்பனையின் விரிவான விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் அறிய அணுக வேண்டிய இணையப் வழங்கப்பட்டுள்ள இணையத்தளங்கள்: http://omkaraarc.com/auction.php மற்றும் / அல்லது https://www.auctionbazaar.com/. ஏலமானது OARPL மூலம் இணைய வழியில் நடத்தப்படும். ஏலப்புள்ளியை (இணையவழியிலும் கூடவே அச்சு வடிவிலும்) டேவணித்தொகையுடன் (அரல் கேட்பு வரைவோலை (DD) / செலுத்தாணை (PO) அல்லது NEFT/RTGS மூலம்) தாக்கல் செய்யக் கடைசி நாள் 24.09.2025 அன்று மாலை 05:00 மணி, டேவணித் தொகையைத் தாக்கல் செய்த ஆர்வமுள்ள ஏலதாரர்கள் பயனர் பெயர் & கடவுச்சொல் உருவாக்குதல், தரவுகளைப் பதிவேற்றுதல், ஏலப்புள்ளியைத் தாக்கல் செய்தல், e–ஏலக்கோரல் நடைமுறையில் பயிற்சி பெறுதல் முதலானவற்றில் உதவி தேவைப்பட்டால் தொடர்பு கொள்ள வேண்டிய e–ஏலச் சேவை வழங்குநர் "M/s. ஆர்கா E–மார்ட் பிரைவேட் லிட்.", உதவித் தரவலர் என்ன / கைப்பேசி எண்: 8370969696, உதவி மின்னஞ்சல் முகவரி: contact@auctionbazaar.com / support@auctionbazaar.com, தொடர்புடைய அலுவலர்: திருமதி M.கிரண்மாயா, கைப்பேசி எண்: 7997043999, மின்னஞ்சல்: kiran@auctionbazaar.com. சொத்து தொடர்பான கேள்விகளுக்கு அணுக வேண்டிய அதிகாரப்பூர்வ அலுவலர்: திரு.ஹர்ஷ்வர்தன் கடம் (கை.: 9819058003), மின்னஞ்சல்: harshwardhan.kadam@omkaraarc.com.

முக்கியமான நாள்கள்

EMD செலுத்தவேண்டிய நாள்	விலைப்புள்ளி சமர்ப்பிக்கும் நாள்	E–ஏல நாள் மற்றும் நேரம்
24.09.2025 அன்று மாலை 5.00 மணி வரை	24.09.2025 அன்று மாலை 5.00 மணி வரை	25.09.2025 அன்று முற்பகல் 11.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை

குறைந்தபட்ச ஏல உயர்வுத் தொகை	ரூ.1,99,800/– (ரூபாய் ஒரு இலட்சத்து தொண்ணூற்று ஒன்பதாயிரத்து எண்ணூறு மட்டும்)

கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6)– அதனுடன் 9(1) ஆகியவற்றின் கீழான சட்டப்படியான விற்பனை அறிவிப்பு

இது கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(6)– அதனுடன் 9(1) மற்றும் கடனீட்டுக் சொத்துக்களை ஒரக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுக் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 ஆகியவற்றின்படி, மேற்குறிப்பிட்ட நாளிலும் நேரத்திலும் ஏலம் / விற்பனை நடைபெற உள்ளதைக் கடன்தாரர்களுக்குத் தெரிவித்து, அவர்கள் விரும்பினால் மேற்குறிப்பிட்ட நிலுவைத் தொகைகளைச் செலவினம் மற்றும் செலவுகளுடன் செலுத்திச் சொத்துக்களை மீட்டுக் கொள்ளுமாறு அறிவுறுத்தும் வகையில் அவர்களுக்கு விடுக்கப்படும் 15 (பதினைந்து) நாள் கட்டாய அறிவிப்புப் ஆகும். அவ்வாறு தொகையைச் செலுத்தத் தவறினால், கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதி 8(5)–இன் கீழான முறைகளுள் அதிகாரப்பூர்வ அலுவலருடைய / ஈடு பெற்றுக் கடனளித்த நிறுவனத்திலுடைய விருப்பரிமைக்கேற்ப எதையேனும் செயல்படுத்திச் சொத்துக்கள் விற்பனை செய்யப்படும். அர்வமுள்ள ஏலதாரர்கள் இன்னால்வன்சி மற்றும் பாங்க்ரப்ட்சி சட்டம் 2016, பிரிவு 29அ–இன் கீழ் அறிவிக்கை அளித்து அச்சட்டத்துக்கு ஒத்துழைக்க வேண்டும்.

ஒம்–

நாள்: 04.09.2025 அதிகாரப்பூர்வ அலுவலர், ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிட்.,

இடம்: மும்பை (இந்தியா ரிசர்ஜென்ஸ் ARC டிரஸ்ட் VI –இன் டிரஸ்ட்டியாகச் செயல்படும் முறையில்)

IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிட்டெட்

IDFC FIRST Bank

(முந்தைய கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிட்டெட், IDFC பேங்க் லிமிட்டெட் – உடன் இணைக்கப்பட்டு, தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிட்டெட் – என அறியப்படுவது)

CIN – L65110TN2014PLC097792 பதிவு அலுவலகம் – KRM டவர்ஸ், 8 வது தளம், ஹாரிங்டன் சாலை, சேட்பட், சென்னை – 600 031 தொலைபேசி : +91 44 4564 4000 / தொலைநகல் – +91 44 4564 4022

பிணைக்காப்பு நிதிச்சொத்து மறுசீரமைப்பு மற்றும் பிணைக்காப்பு செயலாக்க சட்டம் 2002 (சட்டம்) ன் பிரிவு 13(2) ன் கீழான அறிவிப்பு

பின்வரும் கடன்தாரர்கள் மற்றும் கூட்டு கடன்தாரர்கள் பின்வரும் பிணைக்காப்பு கடன்களை IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிட்டெட் – (முந்தைய கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிட்டெட், IDFC பேங்க் லிமிட்டெட் – உடன் இணைக்கப்பட்டு, தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிட்டெட் – என அறியப்படுவது) யிடமிருந்து பெற்றுள்ளனர். இதன் கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் கூட்டு கடன்தாரர்களின் கடன்கள் அவரவரது சொத்துக்களை அடமானம் செய்து ஜாமீன் காப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவர்கள் அந்தந்த கடன் ஒப்பந்தங்களின் விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு கட்டுப்பட தவறியமையாலும், ஒழுங்கற்று மாறியதாலும், இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களின் படி, அவர்களது கடன் செயல்படாத சொத்தாக பகுக்கப்பட்டுள்ளது. அவர்களால் IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிட்டெட் (முந்தைய கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிட்டெட், IDFC பேங்க் லிமிட்டெட் – உடன் இணைக்கப்பட்டு, தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிட்டெட் – என அறியப்படுவது) – க்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகை மற்றும் மேற்சொன்ன தொகை மீது அந்தந்த தேதிகளிலிருந்து மேற்கொண்டு பொருந்தத்தக்கவாறு வரும் ஒப்பந்த வீதத்திலான வட்டி ஆகியன பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டு, அவரவர்களுக்கு வழங்கப்பட்ட அறிவிப்புகளில் முழுமையாகவும் குறிப்பாகவும் விவரிக்கப்பட்டுள்ளதோடு., அது ஒப்பந்த வீதத்தின் படி அந்தந்த தேதிகள் முதல் கணக்கிடப்பட்டு வசூலிக்கப்படும்.

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன் வகை	கடன்தாரர்கள் மற்றும் கூட்டு கடன்தாரர்கள் பெயர்	பிரிவு 13 (2) அறிவிப்பு தேதி	பிரிவு 13 (2) அறிவிப்பின் படி நிலுவைத்தொகை
1	45126465	சொத்துக்கு எதிரான கடன்	1). R பத்மினி 2). ஆகாஷ் ராஜசேகரன் 3). பாலாஜி R	31.07.2025	இந்திய ரூபாய். 1,79,402.56/–
சொத்து முகவரி – சேலம் கிழக்கு பதிவு மாவட்டம், ஆத்தூர் சார்பதிவகம், மஞ்சனி கிராமம், ஆவணத்தின் படி நத்தம் R S எண். 85/3, புதிய நத்தம் R S எண். 309/19 ல் உள்ள 690 சதுர அடி., இதில் உள்ள ஒட்டுவில்லை வீடு உள்ளிட்ட அசையா சொத்து சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். எல்லைகளாவன பின்வருமாறு – வடக்கு – கிழமேல் பொது தெரு, தெற்கு – கிழமேல் பொது சந்து, கிழக்கு – ராமன் வீடு, மேற்கு – மஞ்சனி – வளையமாதேவி சாலை,				
2	61926623 & 109485368	சொத்துக்கு எதிரான கடன்	1). கார்த்திக் வடிவேல் 2). வடிவேல் நாராயணன் 3). சாந்தி வடிவேல்	31.07.2025	இந்திய ரூபாய். 16,04,931.20/–
சொத்து முகவரி – நாமக்கல் மாவட்டம், நாமக்கல் பதிவு மாவட்டம், திருச்செங்கோடு சார்பதிவகம், முன்பு திருச்செங்கோடு தாலுக்கா, தொக்கவாடி கிராமம், சர்வே எண். 186/1 ல் அமையப்பெற்ற புஞ்சை ஏக்கர் 13.36 சென்ட்., க்கு தீர்வை ரூ. 16.70, பட்டா எண். 538, சர்வே எண். 186/1B1 ல் அமையப்பெற்ற புஞ்சை நெறக் 4.79.5 க்கு தீர்வை ரூ. 14.82, 13 அடி அகல கிழமேல் சாலை, வடக்கு புறம் உள்ள பஞ்சாயத்து சாலை, சுமதி பழனிசாமி இடங்கள், புஞ்சை ஏக்கர் 1.89 சென்ட்., இடங்கள் வீட்டுமனை இடங்களாக பிரிக்கப்பட்டு "ஸ்ரீ குமரன் நகர் அனெக்ஸ்" என்ற பெயரில் உள்ள லே அவுட்டில் உள்ள 1935–1/2 சதுர அடி அல்லது 179.8 சதுர அடி பரப்பளவு கொண்ட வீட்டுமனை இடம் எண். 26அ என்ற சொத்து மற்றும் அதனுடன் கூடிய சகல உரிமைகள் மற்றும் உடைமைகள் முழுவதும். 1 வது இனம் – 1293–3/4 சதுர அடி பரப்பு., பின்வரும் எல்லைகளுக்கு மத்தியில் உள்ளது, அவையாவன – மேற்கு – 25 அடி அகல தென்வடல் சாலை, கிழக்கு – சுமதி, பழனிசாமி இடங்கள், தெற்கு – மலபாளையம் – தொக்கவாடி கிழமேல் சாலை, வடக்கு – S தமிழரசி விற்ற வீட்டுமனை இடம் எண். 26 இடம். மேற்சொன்ன எல்லைகளுக்கு மத்தியில் உள்ள அளவீட்டு விபரங்களாவன – கிழமேல் வடக்கு புறம் மற்றும் தெற்கு புறம் – 51–3/4 அடி, தென்வடல் கிழக்கு புறம் மற்றும் மேற்கு புறம் – 25 அடி., என மொத்தம் 1293–3/4 சதுர அடி மற்றும் மாமூல் பாதை, பொது சாலை, பொது உரிமைகள் ஆகியன. 2 வது இனம் – 641–3/4 சதுர அடி பரப்பு., பின்வரும் எல்லைகளுக்கு மத்தியில் உள்ளது, அவையாவன – மேற்கு – கிழக்கு – தெற்கு – வடக்கு – மேற்சொன்ன எல்லைகளுக்கு மத்தியில் உள்ள அளவீட்டு விபரங்களாவன – கிழமேல் வடக்கு புறம் – 514–3/4 அடி., கிழமேல் தெற்கு புறம் – 28–1/2 அடி, தென்வடல் கிழக்கு புறம் – 8 அடி., தென்வடல் மேற்கு புறம் – 34–1/2 அடி., என மொத்தம் 641–3/4 சதுர அடி மற்றும் மாமூல் பாதை, பொது சாலை, பொது உரிமைகள் ஆகியன. தொக்கவாடி பஞ்சாயத்து, 1 வது இனம் – 1293–3/4 சதுர அடி, 2 வது இனம் – 641–3/4 சதுர அடி., என மொத்தம் 1935–1/2 சதுர அடி அல்லது 179.8 சதுர மீட்டர்., இதன் தற்போதைய புதிய சர்வே எண். 186/1B1A1A1, பட்டா எண். 538.				

தாங்கள் இதன் மூலம் , IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிட்டெட் (முந்தைய கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிட்டெட், IDFC பேங்க் லிமிட்டெட் – உடன் இணைக்கப்பட்டு, தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிட்டெட் – என அறியப்படுவது) – க்கு செலுத்தப்பட வேண்டிய இதன் கீழ்க்கண்ட அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ள விபரங்களின் படியிலான தொகைகளை அந்தந்த தேதிகளிலான ஒப்பந்த வீதத்திலான வட்டி மற்றும் இதர செலவுகள் ஆகியவற்றை இந்த பிரசுரத்திலிருந்து 60 நாட்களுக்குள் திருப்பி செலுத்த கேட்டுக்கொள்ளப்படுகிறது., தவறும் படசத்தில், கீழ்க்கையொப்பமிட்ட நபர், IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிட்டெட் (முந்தைய கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிட்டெட், IDFC பேங்க் லிமிட்டெட் – உடன் இணைக்கப்பட்டு, தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிட்டெட் – என அறியப்படுவது) – க்கு செலுத்தப்பட வேண்டிய நிலுவைத்தொகைகளை வசூலிப்பதற்காக இதன் மேற்குறிப்பிட்டுள்ள அடமான சொத்துக்களுக்கு எதிராக சர்ஃபாசி சட்டம் 13(4) மற்றும் 14 ன் கீழ் செயல்முறை நடவடிக்கைகளை எடுக்க கட்டாயமாக்கப்படும். மேலும், தாங்கள் மேற்சொன்ன சட்டம் பிரிவு 13(13) ன் கீழ் மேற்சொன்ன பிணைக்காப்பு சொத்துக்களை விற்பனைக்கா / வாடகைக்கோ அல்லது வேறு எவ்வித்திலுமோ பரிமாற்றம் செய்வதிலிருந்து தடை செய்யப்படுகிறீர்கள்.

ஒப்பம்/–

அதிகாரப்பூர்வ அலுவலர்

IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிட்டெட்

தேதி : 05.09.2025 (முந்தைய கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிட்டெட், IDFC பேங்க் லிமிட்டெட் – உடன் இணைக்கப்பட்டு,

இடம் : சேலம்–நாமக்கல், தமிழ்நாடு தற்போது IDFC ஃபர்ஸ்ட் பேங்க் லிமிட்டெட் – என அறியப்படுவது)

தெரு நாய்கள் பிரச்னையில் வெளிநாடுகளின் நடைமுறைகளை பின்பற்றலாம்: உயர்நீதிமன்றம்

சென்னை, செப். 4: தெரு நாய்கள் பிரச்னை வெளிநாடுகளில் எவ்வாறு கையாளப்படுகிறது என்பதைத் தெரிந்துகொண்டு, அவ்வாறான நடைமுறைகளைப் பின்பற்றலாம் என்று சென்னை உயர்நீதிமன்றம் கருத்து தெரிவித்துள்ளது.

சென்னை கோடம்பாக்கத்தைச் சேர்ந்த வழக்குரைஞர் ஆர்.எஸ்.தமிழ்வேந்தன் உயர்நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவில், தமிழகத்தில் செல்லப் பிராணியாக ராட்வீலர் வகை நாய் வளர்க்கப்படுகிறது. இந்த வகை நாய்கள் மிகவும் ஆக்ரோஷமானவை. சென்னை கொளத்தூர் பகுதியைச் சேர்ந்த சிறுமியை கடந்த ஆண்டு இவ்வகை நாய் கடித்துக் குதறியது. கடந்த ஜூன் மாதம் ராட்வீலர் நாய் கடித்து வண்ணாரப்பேட்டையைச் சேர்ந்த ஆட்டோ ஓட்டுநர் பலத்த காயமடைந்தார்.

நடைப்பயிற்சிக்காக வெளியே வரும் உரிமையாளர்கள் ராட்வீலர் வகை நாய்களுக்கு முகக்கவசம் அணிவிப்பது இல்லை. இதனால் குழந்தைகள், மாணவர்கள், முதியோர், கர்ப்பிணிகள் உள்ளிட்ட பொதுமக்களுக்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் ஏற்படுகிறது. எனவே, அபாயகரமான இந்த வகை நாயை பொது இடத்துக்கு அழைத்து வரத் தடை விதிக்க வேண்டும்.

ராட்வீலர் நாயை பொதுவெளியில் அழைத்து வருவதற்கான விதிகளை உருவாக்கக் கோரி, சென்னை மாநகராட்சி ஆணையருக்கு கடந்த ஜூன் 10-ஆம் தேதி மனு அளித்தேன். அந்த மனு மீது இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று கூறியிருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், நாய்க்கடி சம்பவங்களைத் தடுக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டிருந்தது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி எம்.எம்.ஸ்ரீவாஸ்தவா மற்றும் நீதிபதி ஜி.அருள்முருகன் ஆகியோர் அடங்கிய அமர்வில் வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது, அரசுத் தரப்பில் ஆஜரான மாநில அரசு பிளீடர் எட்வின் பிரபாகர், நாடு முழுவதும் உயர்நீதிமன்றங்களில் நிலுவையில் உள்ள நாய்கள் பிரச்னை தொடர்பான வழக்குகள் அனைத்தும் உச்சநீதிமன்றத்துக்கு மாற்ற உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, இந்த வழக்கையும் உச்சநீதிமன்றத்துக்கு மாற்ற வேண்டும் என்று கூறினார்.

இதை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், இந்த வழக்கை உச்சநீதிமன்றத்துக்கு மாற்றி உத்தரவிட்டனர். பின்னர், தற்போதைய தீவிரமான பிரச்னையாக தெரு நாய்கள் விவகாரம் உள்ளது. தெருக்களில் பிடிக்கப்படும் நாய்களுக்கு கருத்தடை செய்யப்பட்டு மீண்டும் அதே பகுதிகளில் விடுமாறு உத்தரவிடப்பட்டுள்ளது. அவ்வாறு விடப்படும் நாய்களுக்கு ரேபிஸ் தாக்கியிருந்தால் என்ன செய்வது?

அவற்றைத் தனிக் காப்பகத்தில் அடைத்து பாதுகாத்தால், அந்த நாய்களுக்கு தைரியமாக சென்று யார் உணவளிப்பது? என்பது உள்ளிட்ட பல்வேறு கேள்விகள் எழுகின்றன. வேறு ஏதாவது நடவடிக்கை எடுத்தால் மிருகவதைச் சட்டத்தை சுட்டிக்காட்டி தொண்டு நிறுவனங்கள் சார்பில் வழக்குகள் தொடுக்கப்படுகின்றன.

எனவே, வெளிநாடுகளில் தெரு நாய் பிரச்னை எவ்வாறு கையாளப